இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 15.07.2026

# ஆதிதிராவிடர் சொல் - விவாதம் தேவை

**ஆதிதிராவிடர் என்ற சொல்லை சத்தமே இல்லாமல் நீக்கி இருக்கிறது விஜய் அரசு. இதே செயல் தி.மு.க. ஆட்சியில் நடந்திருந்தால் நாடே ரணகளம் ஆகி இருக்கும். விஜய் ஆட்சியில் விஜய்யைப் போலவே நிரந்தர மவுன விரதம் இருக்கிறார்கள் அவரது கூட்டணியினர்.**

பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் அமைச்சர்கள் ஆனது சாதனை அல்லவா? என்று தனது தோளில் தானே தட்டிக் கொள்கிறார் முதலமைச்சர் விஜய். இந்த எட்டுப் பேரும் பட்டியலின சமுதாயத்துக்காக என்ன செய்திருக்கிறார்கள்? என்பதையும் அவர் சேர்த்துச் சொல்லி இருக்க வேண்டும்.

60 நாட்களுக்குள் 8 ஆணவக் கொலைகள் நடந்துள்ளதையும் சாதனைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாமா?

காலம் காலமாக இருந்த 'ஆதிதிராவிடர்' அடையாளச் சொல்லை திட்டமிட்டு நீக்கவேண்டிய அவசியம் என்ன வந்தது? நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, ஆய்வாளர் கௌதம சன்னா போன்றவர்கள் மட்டுமே இதற்கான எதிர்ப்பை பதிவு செய்துள்ளார்கள்.

அமைச்சரவையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அமைச்சராக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வன்னிஅரசு அவர்கள் அமைச்சராக இருக்கும் போது இது நடந்துள்ளது. இதனை அவர் நியாயப்படுத்திப் பேசியும் இருக்கிறார்.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை என்ற அமைச்சகத்தின் பெயர் சமூகநீதித்துறை என மாற்றப்பட்டு இருக்கிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை என்பதன் நோக்கம் வேறு. அதனை சமூக நீதி என்ற சொல்லுக்குள் மட்டும் அடக்கி விடமுடியாது. சமூக நீதித் துறை என்று சொல்லிவிட்டால் அதனுள் பிற்படுத்தப்பட்டோர் வருவார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வருவார்கள். இதை எல்லாம் விட்டு விட்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் துறைக்கு மட்டும் சமூகநீதித் துறை என்று பெயர் சூட்டி ஆதி திராவிடர் சொல்லை நீக்க வேண்டிய அவசியம் என்ன?**

1922 மார்ச் 20 அன்று ஆதி திராவிடர் என்ற பெயர் மாற்றத்துக்கான உத்தரவு நீதிக்கட்சி ஆட்சியால் பிறப்பிக்கப்பட்டது. அதுவரை தொழிலாளர் நலத்துறைக்குள் தான் ஆதிதிராவிடர் நலனும் அடங்கி இருந்தது. நீதிக்கட்சி ஆட்சியில்தான் தொழிலாளர் நலத்துறையில் இருந்து இது பிரிக்கப்பட்டது.

**1969 ஆம் ஆண்டு முதல்முதலில் முதல்வர் ஆன கலைஞர் அவர்கள் தான் ஆதிதிராவிடர் நலத்துறையையும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையையும் தனித்துறையாக உருவாக்கினார்கள். பிற்படுத்தப் பட்டோர் நலனுக்கான சட்டநாதன் ஆணையத்தை அமைத்தார்கள். அந்தப் பரிந்துரைப்படி இடஒதுக்கீடு முறையை அமல்படுத்தினார் முதலமைச்சர் கலைஞர். இந்த வரலாறு ஏதும் தெரியாமல், அல்லது இந்த வரலாற்றை மறைக்கும் வகையில், திரிக்கும் வகையில் ஆதிதிராவிடர் என்ற சொல் நீக்கப்பட்டுள்ளது.**

"1922 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தை ஆண்டு கொண்டிருந்த நீதிக் கட்சி ஆட்சியின்போது ஒடுக்கப்பட்ட மக்களின் அன்றைய தலைவர்களாயிருந்த பெருந்தலைவர் எம்.சி.ராஜா, மாவீரன் இரட்டைமலை சீனி வாசன் ஆகியோர் போராடிப் பெற்ற 'சாதி கடந்த அடையாளம்' அது. அதற்குமுன் ஆதி திராவிடர் என்ற பெயரில் எந்தவொரு சாதியும் தமிழ் நாட்டில் இருந்ததில்லை.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஒடுக்கப்பட்ட மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் தம்மை அமைப்பாகத் திரட்டிக்கொண்டு செயல்பட்டுள்ளனர். அவ்வாறு உருவான அமைப்புகளில் புராண அடையாளமோ, மத அடையாளமோ அற்ற ஒரு 'சமயச் சார்பற்ற' (secular ) வகையின மாக முன்வைக்கப்பட்டது ஆதி திராவிடர் என்பதே ஆகும். அதை முன்வைத்த தலைவர்களின் அரசியல் முதிர்ச்சியும், தொலைநோக்குப் பார்வையும் போற்றுதலுக்குரியவை. அது இந்தியாவில் உள்ள ஒட்டுமொத்த எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. மக்களுக்குமான முன்னுதாரணம் ஆகும்.

ஆதி திராவிடர் என்ற சாதி கடந்த சமயச் சார்பற்ற அடையாளத்தை கொச்சை யாகப் புரிந்து கொள்பவர்கள்தாம் அதை மாற்ற வேண்டும் எனக் கோருகிறார்கள். அந்தக் கோரிக்கையை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருப்பது வேதனை அளிக்கிறது" என்று ரவிக்குமார் எம்.பி. எழுதி இருக்கிறார்.

திராவிடம் என்பது மொழிக் குடும்பத்துச் சொல்லாக மட்டுமே இருந்துவந்த நிலையில் அதனை அரசியல் சொல்லாக சமூகப் பயன்பாட்டுச் சொல்லாக மாற்றியது தலித் இயக்கங்களே!

இந்தக் கருத்தாக்கத்தின் முதற்கட்ட மூன்று தத்துவாசிரியர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் பண்டிதர் அயோத்தி தாசர் (1845-1914), இரட்டமலை சீனிவாசன் (1859-1945), எம்.சி.இராஜா (1883-1947) ஆகிய மூவரையும் சொல்லலாம்.

1892 இல் உருவான ஆதிதிராவிட ஜனசபை என்ற அமைப்பு உருவானது. இதே காலக்கட்டத்தில் ஜான்ரத்தினம் முயற்சியால் 'திராவிடர் கழகம்' என்ற அமைப்பும் உருவானது. 1916 இல் உருவான ஆதிதிராவிட மகாஜனசபை, 1928 இல் உருவான அகில இந்திய ஆதிதிராவிட மகாஜனசபை ஆகிய மூன்றும் மிக முக்கியமான அமைப்புகள்.

**மிண்டோ மார்லி சீர்திருத்தக் குழுவுக்கு கொடுத்த வகுப்புரிமை விண்ணப்பத்தில் சாதி இந்துக்கள் என்பதை ஒரு பிரிவாகவும் சாதியற்ற திராவிடர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பதை மற்றொரு பிரிவாகவும் பகுத்துக் காட்டினார் அயோத்திதாசர். (1909)**

பார்ப்பனரல்லாதார் அரசியல் வெகுவாகப் பேசப்படத் தொடங்கிய பிறகு ஆதிதிராவிடர் என்ற சொல்லுக்கு அழுத்தம் கொடுத்தார் எம்.சி.இராஜா. **"தமிழ் மாவட்டங்களில் ஆதிதிராவிடர் என்றும் தெலுங்கு மாவட்டங்களில் ஆதி ஆந்திரர் என்றும் இனிமேல் அழைக்க வேண்டும்"** என்று சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார் எம்.சி.இராஜா (1922) நீதிக்கட்சியின் ஆட்சியில்தான் ஆதி திராவிடர் என்று அழைக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

1890களின் இறுதியில் 1900 ஆண்டுகளில் தொடக்கத்திலேயே '**திராவிடன்**' என்பது அரசியல் சொல்லாக, சமூகச் சொல்லாக, இனச் சொல்லாக அரசியல், பண்பாட்டுத் தளத்தில் விதைக்கப்பட்டு விட்டது. அந்தச் சொல்தான் இப்போது நீக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர் என்ற சொல்லை நீக்கியதை ஆதரித்தும் சிலர் பதிவிட்டு வருகிறார்கள். எனவே இதில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய நீண்ட** விவாதம் நடத்தியே முடிவெடுக்க வேண்டும். அரசு அவசரப்படக்கூடாது.

# கவிப்பேரரசு வைரமுத்து 'ஞானபீட விருது' பெற்றார்!

## 'இலக்கியத்துக்கு பல்கலைக் கழகம் வேண்டும்!' எனக் கோரிக்கை!

புதுடெல்லி, ஜூலை 15-

இந்தியாவில் இலக்கியத்துக்கு உயர்ந்தபட்சமாக வழங்கப்படும் ஞானபீட விருது இந்த ஆண்டு கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 25ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ் மொழி பெற்றிருக்கும் மூன்றாவது ஞானபீட விருது இதுவாகும்.

ஜூலை 13 டெல்லியில் நடந்த விழாவில் ஒன்றிய முன்னாள் அமைச்சர் டாக்டர் கரண் சிங் விருதை வழங்கினார். ஞானபீட அமைப்பைச் சேர்ந்த சாகு அகிலேஷ் ஜெயின், ஸ்ரீ முதத் ஜெயின், பிரதீபா ராய், ஆர்.என்.திவாரி ஆகியோர் மேடையில் இருந்தனர். விருதைப் பெற்றுக் கொண்டு கவிஞர் வைரமுத்து ஏற்புரை ஆற்றினார்.

அப்போது அவர் பேசியதாவது :-

"தமிழ்நாட்டின் தென்மேற்கு மூலையில், இந்தியாவின் வரைபடத்திற்குச் சிக்காத ஒரு கடைக் கோடியில், 60 வீடுகளே கொண்ட மெட்டூர் என்ற சிற்றூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் நான் பிறந்தேன். 1950களில் வைகை நதியின் குறுக்கே வைகை அணை கட்டப்பட்டது; அதன் நீர்தேங்கும் பரப்புக்காக 14 கிராமங்கள் காலிசெய்யப்பட்டன. அதில் ஒன்றுதான் நான் பிறந்த ஊர்.

இடுப்புவரை மூழ்கிய ஊர் கழுத்துவரை மூழ்கத் தலைப்படும்போது, அந்த கிராமத்தின் தாயொருத்தி உலர்ந்த கண்ணீரோடும் நனைந்த சேலையோடும் கதறிக்கொண்டே கரையேறுகிறாள். அவள் இடுப்பில் ஒரு பெண் குழந்தை, கைப்பிடியில் ஓர் ஆண் குழந்தை. அப்போதெல்லாம் அவளுக்குத் தெரியாது இடுப்பில் உள்ள பெண்குழந்தை அடுத்த ஆறு மாதத்தில் இறந்துபோகும் என்றும், கைப்பிடியாய்க் கூட்டிவந்த ஆண்குழந்தை அடுத்த எழுபது ஆண்டுகளில் 'ஞானபீட விருது' பெறும் என்றும். அன்று கால் சட்டை நனைய நனையக் கரைசேர்ந்த சிறுவன்தான் இன்று இந்த ஞானபீட மேடையில் உங்கள் முன் நிற்கிறான்; அவன் பெயர் வைரமுத்து.

பிழைக்க வந்த வடுகபட்டியில் வகுப்பு அவனுக்கு எழுத்துக்களைச் சொல்லிக் கொடுத்தது; வறுமை அவனுக்கு வாழ்க்கையைச் சொல்லிக்கொடுத்தது. இரண்டும் அவனைக் கையோடு கூட்டிவந்து கவிதையிடம் சேர்த்தன.

நல்லது காண்பது இலக்கியம்; நம்பிக்கையூட்டுவது இலக்கியம். "விரும்பியது அமையாவிட்டால் அமைந்ததை விரும்பு" என்கிறது உபநிஷத். அமைந்ததை விரும்பாவிட்டால் விரும்பியதை அமை என்கிறது இலக்கியம்

இது 60ஆம் ஞானபீடம்.

என் அரைநூற்றாண்டு எழுத்துக்களைப் பாராட்டி ஞானபீடம் 60 கிராம் அமிர்தப் புட்டி வழங்கியிருக்கிறது. இது எனக்கு மட்டுமே சொந்தம் என்று உரிமை கொள்ள முடியாது. ஒரு கிராம் திருவள்ளுவருக்கு, ஒரு கிராம் இளங்கோவடிகளுக்கு, ஒரு கிராம் கம்பருக்கு, பாரதிக்கு, பாரதிதாசனுக்கு, அண்ணா, கலைஞர், கண்ணதாசனுக்கு ஆளுக்கொரு சொட்டு. அவர்களுக்கு மட்டுமா? காளிதாசனுக்கு ஒரு சொட்டு, வேதவியாசருக்கு ஒரு சொட்டு. வால்மீகிக்கு ஒரு சொட்டு, தாகூருக்கு, ஷேக்ஸ்பியருக்கு, ஃபிர்தௌசிக்கு, மில்டனுக்கு. ஷெல்லி, பைரன், கீட்ஸுக்கு, டி.எஸ்.எலியட்டுக்கு, எஸ்ராபவுண்டுக்கு கடைசியாய் ஒரு சொட்டு கலீல் ஜிப்ரானுக்கு இப்படிப் பகிர்ந்து கொடுத்தது போகக் கரண்டியில் ஒட்டியிருக்கும் ஈரப்பசை மட்டும் என் பங்கு ஆகலாம்.

இந்த விருது என்னை ஒரு சாய்வு நாற்காலியில் சாய்த்துவிடாது. இது ஓடிவந்த குதிரைக்கு நீட்டப்படும் புல் அல்ல; குதிரை மீது விழுந்த மற்றுமொரு சாட்டையடி. குதிரை இன்னும் வேகமெடுக்கும்; நான் வெறிகொண்டு ஓடுவேன். இந்த விருதுக்கு என் தமிழ் இன்னும் நியாயம் செய்யும்.

எனக்குச் சில கேள்விகள் உண்டு.

இலக்கியத்துக்காக இந்தியா ஒரே ஒரு நோபல் பரிசு பெற்று 113 ஆண்டுகள் கடந்துவிட்டன. அதன் பிறகு நோபல் பரிசு பெறத் தகுதியான ஒரு படைப்பாளியை இந்தியா தயாரிக்கவில்லையா? அல்லது நோபல் குழு கண்டுபிடிக்கவில்லையா? ஏகப்பட்ட உலக அழகிகளைத் தயாரித்த இந்தியா உலகக் கவிகளைத் தயாரிக்க மறந்ததா?

ஒவ்வொரு தொழில்நுட்பத்துக்கும் ஒவ்வொரு பல்கலைக்கழகம் காணும் நாம், இலக்கியத்துக்கு என்று தனியே ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவக் கூடாதா? அது எப்போது?

இந்தக் கேள்விகளோடு என் ஏற்புரையை நிறைவு செய்கிறேன். இந்த விருதுக்கு என்னைத் தகுதிப்படுத்திய ஒவ்வொரு சமூக மனிதனுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்"

இவ்வாறு கவிப்பேரரசு வைரமுத்து தமது ஏற்புரையில் குறிப்பிட்டார்.



டெல்லியில் நடந்த விழாவில் 60ஆவது ஞானபீட விருது, கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு வழங்கப்பட்டது. முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் கரண்சிங் விருது வழங்கினார். ஞானபீடத்தின் நிர்வாக அறங்காவலர் அகிலேஷ் ஜெயின், தேர்வுக்குழுத் தலைவர் டாக்டர் பிரதிபா ராய் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு எதிராக 'லுக்அவுட்' நோட்டீஸ்!

# த.வெ.க. அரசின் கோரிக்கை நிராகரிப்பு!

## உயர்நீதிமன்ற உத்தரவை ரத்துச் செய்ய உச்சநீதிமன்றம் மறுப்பு!

புதுடெல்லி, ஜூலை 15 -

எ.வ.வேலுவுக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை பிறப்பித்த தேடப்படும் நபர் (லுக் அவுட் நோட்டீஸ்) சுற்றறிக்கைக்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது.

அடுத்தகட்ட விசாரணை வரையிலும், எ.வ.வேலுவுக்கு எதிராகக் கைது போன்ற எவ்விதக் கடுமையான நடவடிக்கைகளையும் எடுக்கக் கூடாது என லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு வழக்கை அவசர வழக்காக விசாரிக்க உச்ச நீதி மன்றம் மறுத்துள்ளது.

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு எதிராக தமிழக லஞ்ச ஒழிப்பு போலீசாரால் பிறப்பிக்கப்பட்ட 'லுக் அவுட்' நோட்டீசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் தடை விதித்த விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் அவசர கோரிக்கையை உச்சநீதி மன்றம் அதிரடியாக நிராகரித்துள்ளது.

தமிழகத்தில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலைகளை மேம்படுத்த அரசு சார்பில் ரூ.5000 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த திட்டத்தின்கீழ் கரூரில் எவ்வித பணிகளும் மேற்கொள்ளப்படாமல் தனியார் நிறுவனங்களுக்கு விதிகளை மீறி ரூ.3.5 கோடி விடுவிக்கப்பட்டு, முறைகேடுகள் நடந்துள்ளதாக அறப்போர் இயக்கம் சார்பில் புகார் அளிக்கப்பட்டிருந்தது.



இந்த புகாரின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு மற்றும் நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், ஒப்பந்ததாரர்களுக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இதற்கிடையே, எ.வ.வேலு சிகிச்சைக்காக வெளிநாடு சென்ற நிலையில், அவரை தேடப்படும் நபராக அறிவித்து லஞ்ச ஒழிப்புத்துறை போலீசார் லுக் அவுட் நோட்டீஸ் பிறப்பித்தனர்.

இதனை எதிர்த்து எ.வ.வேலு தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், வழக்கை ரத்து செய்யக் கோரிய மனுவுக்கு, வரும் 27ம் தேதிக்குள் பதிலளிக்கும்படி லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிட்டதோடு, அதுவரை கடும் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கக் கூடாது எனக்கூறி அவருக்கு எதிரான லுக் அவுட் நோட்டீசுக்கு இடைக்கால தடை விதித்து கடந்த வாரம் உத்தரவிட்டது.

இந்நிலையில் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் சென்னை திரும்பினார். அவர் விமான நிலையத்தில் பேட்டியளிக்கும்போது, ''தி.மு.க. யாருக்கும் பயந்து ஓடும் இயக்கம் இல்லை.

நான் எந்த தவறும் செய்யவில்லை. விசாரணைக்கு வந்த லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம், அன்றுதான் நான் சிங்கப்பூருக்கு சிகிச்சைக்கு செல்வதாக இருந்தேன். சோதனைக்கு வந்ததால், டிக்கெட்டை மாற்றும்படி சொல்லியுள்ளேன் என்று விசாரணை அதிகாரியிடம் கூறிவிட்டுத்தான் வெளிநாடு சென்றேன்.

ஆனால் தமிழக அரசு வேண்டும் என்றே உள் நோக்கத்துடன் இது போன்ற உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது" எனக் கூறினார்.

இந்நிலையில், உயர்நீதி மன்றத்தின் இந்த இடைக்கால தடை உத்தரவை ரத்து செய்யக்கோரி தமிழ் நாடு அரசு சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வில் ஆஜரான தமிழக அரசின் வழக்கறிஞர், 'முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட 'லுக் அவுட்' நோட்டீசுக்கு உயர்நீதி மன்றம் தடை விதித்துள்ளது. எனவே, இந்த விவகாரத்தில் உயர்நீதிமன்றம் முன்னதாக பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டும். இதுதொடர்பான மேல்முறையீட்டு மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும்' என்று முறையிட்டார்.

இந்த கோரிக்கையை அதிரடியாக நிராகரித்த தலைமை நீதிபதி சூர்யகாந்த், இந்த வழக்கை கண்டிப்பாக விசாரிக்க முடியாது; வரும் புதன் கிழமை வேண்டுமானால் சூழலை கண்காணித்த பிறகு பட்டியலிட முயற்சி செய்கிறோம்' என்று கூறி தமிழ்நாடு அரசின் கோரிக்கையை நிராகரித்து உத்தரவிட்டார்.



முன்னாள் அமைச்சர் – முதுகுளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் முதுகுளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட கமுதி நகர பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.வாசுதேவன், பேரூர் கழகச் செயலாளர் பாலமுருகன் மற்றும் சண்முகநாதன் உட்பட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.